Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 252/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | ஆண்டிச்சாமி | தொழில் | : | சித்த மருத்துவர் |
| கிராமம் | : | புதுகாமன்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 40 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் புதுகாமன்பட்டியில் குடியிருந்துகொண்டு சித்த மருத்துவராக தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 09.03.2023 ஆம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் நானும், எனது அம்மா காமாட்சியும் எங்கள் வீட்டில் இருந்தபோது, எதிரிகள் பழனிச்சாமி, ராஜ்குமார், கெப்பனண், செல்லம்மாள் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து எனது கேட்டை உடைத்து, அங்கு நிறுத்தி வைத்திருந்த TVS XL இருசக்கர வாகனத்தையும் உடைத்துவிட்டார்கள். TVS XL ல் இருந்த பெட்ரோலை பிடித்து எங்கள் வீட்டின் முன்பு ஊற்றி கொழுத்திவிடுவோம் என்று மிரட்டினார்கள். அக்கம் பக்கத்தில் இருந்த நபர்கள் எதிரிகளை சத்தம் போட்டு அனுப்பி வைத்தார்கள். அன்றையதினம் நடந்த சம்பவம் சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் படி செம்பட்டி காவல்நிலையம் வந்து புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுயைடது தான். அந்த புகார் மனுவை நான் தான் கைப்பட எழுதிக்கொடுத்தேன். அந்த புகார் மனு சம்மந்தமாக எதிரிகளை விசாரணைக்காக செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து அழைத்தார்கள். நாங்கள் மட்டும் காவல்நிலையம் சென்றோம். எதிரிகள் வராததால் அவர்களை மீண்டும் 16.03.2023 ஆம் தேதி வரச்சொன்னார்கள். அன்றையதினம் காலை 08.00 மணிக்கு நான் காவல்நிலையம் செல்ல புறப்பட்டுக்கொண்டிருந்தபோது எதிரிகள் ராஜ்குமார் கட்டையை எடுத்துக்கொண்டு எனது வீட்டிற்கு வந்து நான் கொடுத்த புகாரை வாபஸ் வாங்க வேண்டும் என்றும், இல்லையென்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி அவர் வைத்திருந்த கட்டையால் எனது தலையில்

அடித்தார். அதன்பின்பு என்னை மறுபடியும் தாக்க முயற்ச்சித்த போது நான் கையால் தடுத்ததால் அவர் எனது இடது கைவிரல்களில் கடித்துவிட்டார். அதில் என்கு ரத்தம் வந்தது. தடுக்க வந்த எனது தாயார் காமாட்சியம்மாள் என்பவரையும் அடித்தார். அப்போது அவருடன் வந்த கெப்பனண், செல்லம்மாள் ஆகியோர்கள் ராஜ்குமாரிடம் அவர்களை அடித்து காலி பண்ணிட்டு வாடா என்று சொன்னார்கள். அதன்பின்பு நான் காவல்நிலையம் சென்று நடந்த விசயத்தை சொல்லி புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனுவை நான் தான் எழுதிக்கொடுத்தேன். அந்த **புகார் மனு (அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு காயம்பட்ட நான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திண்டுக்க அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு ஒரு நாள் சிகிச்சை பெற்றேன். எனக்கு எதிரிகள் அடித்ததில் தலை, நெஞ்சு பகுதியில் ரத்த கட்டு இருந்தது. தற்போது வரை எனக்கு தலையில் அந்த பாதிப்பு இருந்து வருகிறது. நெஞ்சிலும் வழி இருந்து வருகிறது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் மனுவில் உங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீட்டைக் கட்டிக்கொண்டேன் என்று சொல்லியுள்ள நிலையில் மேற்படி நிலம் உங்களுக்கு தான் பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் சொல்லும் சம்பவ தேதியில், சம்பவ இடத்தில் நீங்களும், உங்கள் அம்மாவை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல, ஊர்க்காரர்கள் இருந்தார்கள். சண்டையை விலக்கிவிட்டார்கள். உங்களிடம் காட்டப்படும் புகார் மனுவில் ஊர்க்காரர்கள் யார், யார் இருந்தார்கள் என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், விசாரணையில் கூறினேன். உங்கள் அம்மாவும், எதிரி பழனிச்சாமியின் அம்மாவும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான்.

உங்கள் அம்மாவுக்கும், பழனிச்சாமியின் அம்மாவுக்கும் பாகப்பிரிவிணை நடக்கவில்லை என்றால் நடந்திருக்கிறது. நீங்கள் சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்ற விபரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில், சம்பவ தேதியில் வேறு சாட்சிகள் யாரும் இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், விசாரணயில் கூறியுள்ளேன். உங்களுக்கும், 2 ம் எதிரிக்கும் இருக்கும் சொத்து பிரச்சனை காரணமாக அவரது சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

நீங்கள் சொன்னது போல் எதிரிகள் யாரும் உங்களை தாக்கவில்லை என்றும், அதனால் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதியில் எதிரிகள் யாரும் உங்களை அடிக்கவில்லை, மிரட்டவில்லை என்றும், பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. XL வாகனத்தை அடித்து சேதப்படுத்தினார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் தாக்கியதால் தலையில் ரத்தகட்டும், நெஞ்சு வலியும் ஏற்பட்டதாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான், விசாரணையில் சொல்லியுள்ளேன்.

சம்பவத்தை விலக்கிவிட்ட பக்கத்து வீட்டுக்காரர்கள் யார் என்று புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் புகாரில் சொல்லவில்லை, போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையிலும் இந்த விளக்கத்தை சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக மேற்படி நபர்களின் விபரத்தை சொன்னதாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 252/2023**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமாட்சி | ஜாதி | : | |
| க/பெ | : | ஆண்டிச்சாமி | தொழில் | : | கூலிவேலை |
| கிராமம் | : | புதுகாமன்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 70 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் புதுகாமன்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வராஜ் எனது மகன் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது எதிரிகள் ராஜ்குமார், பழனிச்சாமி, கெப்பனண், செல்லம்மாள் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் கதவை திறக்கச் சொன்னார்கள். அப்போது கதவையும், வீட்டில் இருந்த லைட்களையும் உடைத்துவிட்டார்கள். அப்போது எனது மகனை வெளியே வரச்சொன்னார்கள். நான் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். அது சம்மந்தமாக எனது மகன் செம்பட்டி காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார். சண்டை நடந்த தினத்தன்று எனது மகனை அடித்துவிட்டு, எனது மகனை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொன்னார்கள். அது சம்மந்தமாக செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து வந்து விசாரித்தார்கள். நான் நடந்த விசயத்தை பற்றி சொன்னேன். காவல்நிலையத்தில் இருந்து எங்களை புகார் கொடுத்து 6 நாட்கள் கழித்து வரச்சொன்னார்கள். அங்கு செல்வதற்காக நானும், எனது மகனும் புறப்பட்டுக்கொண்டிருந்தபோது எதிரி ராஜ்குமார் உருட்டுகட்டையால் எனது மகனை எங்கள் தலவாசம் முன்பு வைத்து தலையிலும், நெஞ்சிலும் அடித்தார். அப்போது

தடுக்க சென்ற என்னை ராஜ்குமார் கீழே தள்ளிவிட்டார். அப்போது ஊரில் இருந்த அக்கம் பக்கத்தில் இருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள். அப்போது போலிசார் அங்கு வந்து எங்களை விசாரித்துவிட்டு எதிரி ராஜ்குமாரை பிடித்து காவல்நிலையம் அழைத்து சென்றார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2ம் எதிரி பழனிச்சாமியின் தாயார் உங்கள் உடன்பிறந்தவர் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது எந்த தேதி என்றால் எனக்கு நினைவில்லை. சண்டையை யார், யார் விலக்கினார்கள் என்றால் அப்போது நிதானம் இல்லை என்பதால் நினைவில்லை. சம்பவம் தொடர்பாக நீங்கள் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டீர்களா என்றால் இல்லை. உங்கள் மகன் செல்வராஜ் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறவில்லை என்றும், சொத்து பிரச்சனைக்காக சம்பவம் நடந்ததாக சொல்லி சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 252/2023**

**Deposition of PW.3 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | ஜாதி | : | |
| க/பெ | : | கிருஷ்ணசாமி | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | மேலக்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 49 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317 படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் மேலக்கோட்டையில் குடியிருந்துகொண்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வராஜை எனக்கு தெரியும். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் அ.சா.1 செல்வராஜ் வீட்டிற்கு வேலைக்கு சென்றிருந்தபோது காலை சுமார் 08.00 மணியளவில் அன்றையதினம் ஒரு 3 நபர்கள் அ.சா.1 ன் வீட்டிற்குள் சென்று அவரை அடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை நான் தடுத்தேன். அ.சா.1 ஐ அடித்த நபர்களில் ஒரு நபர் மது அருந்திவிட்டு அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை அடித்தார். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். சண்டையை நாங்கள் விலக்கிவிட்டோம். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை அடித்த நபர்களை நான் பார்த்தேன். அந்த நபர்களை நான் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சி மூலம் எதிரிகளை அடையாளம் காண்பிக்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor